**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 607/2021 இ.ம.எண்.
எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 06-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மெய்யழகன் | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள எழுதியதும், சாட்சி என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புரோநோட்டை முருகேசன், வாதி அன்பரசுக்கு எழுதிக்கொடுத்தார், கையெழுத்துக்கள் மற்றும் கைரேகைகள் செய்துள்ளார்.